அங்கே நிதிநிலைமை காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் 1986–87-ல் பழங்குடியினர் நலத் திட்டத்தின் மூலமாக சங்கராயபுரத்திலே சிறிய அளவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. சா. ஜெயச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிதிநிலைமை சரியில்லை என்று கூறினார்கள். சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனி நபர்கள், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த தனியார் ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் அமைக்க முன்வந்தால் அரசு அனுமதி அளிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத்தலைவா அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இந்தத் துறைக்கு சம்பந்தப்பட்டதல்ல. பழங்குடியினர் நலத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்குத் தனியாக ஏற்படுத்த வேண்டுமென்று அரசு கருதுகிற காரணத்தால் 1986–87-ல் சங்கராயபுரத்தில் ஒரு சிறிய தொழிற்கூடம் அமைக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மற்ற விவரங்களை மற்ற துறைகளில் கேட்டால்தான் அதற்கான விளக்கம் தெரிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

போடிநாயக்கனூரில் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதி மன்றம்.

748—(*வினா எண். 5651) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் போடிநாயக்கனூரில் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு திட்டம் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : போடிநாயக்கனூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் உயர்நீதிமன்றத்திடமிருந்தோ, வழக்குரைஞர் சங்கத்திடமிருந்தோ அல்லது பொதுக்களிடமிருந்தோ வரவில்லை. அவ்விதம் வரும்பொழுது நிதி நிலைமையை அனுசரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1986 மே 14]

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்காக பொது மக்களிடமிருந்து வந்திருக்கிற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு வரும் ஆண்டிலாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா? மேலும் நீதிமன்றம் அமைக்கிற போதே அதற்கான கட்டிடங்களையும் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டிலே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் அதாவது குற்றவியல் இரண்டாம் வகுப்ப நீதிமன்றம் இருக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் ஆங்கு இதைக் கொணர அரசு பரிசீலிக்கும். ஆனால் நீதிமன்றம் ஏற்படுத்துகிற அதே நேரத்திலேயே நீதிமன்றக் கட்டடமும் கட்டித் தரப்பட முடியும் என்று சொல்வதற்கில்லை. காரணம், நிதி நிலைமைக்கேற்பதான் அதைச் செய்ய முடியும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நீதிமன்றங்களில் குற்றவியல் நீதிபதிகள் இல்லை என்ற குறையைப் போக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒட்டுமொத்தமாக இரண்டு இடங்களில்தான் குற்றவியல் நீதிபதிகள் இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கும் தக்க நடவடிக்கையை உயர்நீதிமன்றம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவி பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே இரண்டு பேரை தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்து உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி தற்போது அந்தக் காலியிடங்கள் நிரப்பப்பட இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைச்சாலை சமையல் கூடங்கள்.

749—(*வினா எண். 6592) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு சமையல் செய்வதற்கு விறகுக்குப் பதிலாக சமையல் கேஸ் பயன்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?